**2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் தேதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள திண்டிவனம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்டப் பொருள்**

**முன்னிலை:- திரு.பு.ஸ்ரீபிரகாஷ்,**
**தனி அலுவலர் (பொ)**
**திண்டிவனம் நகராட்சி.**

**1)** இந் நகராட்சிக்குட்பட்ட சுப்ரமணிய சுவாமி கோயில்தெரு காய்கறி அங்காடி உள்ள பகுதியில் திருவாங்கூர் பேங்க் முதல் ராஜாங்குளம் வரை சாலை மிகவும் சேதமடைந்து போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாகவும் மற்றும் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்குவதாலும் பொது மக்கள் அவதிபடுகிறார்கள். எனவே பழுதடைந்த சாலையை பேவர் பிளாக் சாலையாக அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூபாய்.5.00 இலட்சத்திற்கும் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** இந் நகராட்சிக்குட்பட்ட ராஜாஜி தெரு, திருவள்ளுவர் தெரு, கம்பர் தெரு, மாரியம்மன் கோயில் தெரு மற்றும் வகாப் நகர் ஆகிய இடங்களில் உள்ள சிறுபாலங்கள் சேதமடைந்து இருப்பதால் இரவு நேரங்களில் வாகனங்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளதால் சிறு பாலங்கள் அமைக்கவும் மற்றும் பெலாக்குப்பம் ரோடு, காலிமான் கொல்லை தெரு ஆகிய இடங்களில் சேதமடைந்துள்ள கால்வாய்களை புதுப்பிக்கவும் , நாகலாபுரம் சிறுபாலத்தில் பக்க சுவர் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூபாய் 8.00 இலட்சத்திற்கும் நகரரட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** **1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**3)** மாவட்ட ஆட்சியர்,விழுப்புரம் அவர்களின் ந.க.எண் : ஆ6/1441/2018 நாள் : 28.03.2020 ம் தேதிய செயல்முறை உத்தரவில் திண்டிவனம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள கடிதத்தை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட சந்தைமேடு மையத்தின் எண். 33607230127 அங்கன்வாடி மையம் சமையல் அறை,குழந்தை கழிவறை,குடிநீர் வசதி செய்தல் பணி | 10,00,000/– |

**அலுவலக குறிப்பு:–** பதிவு செய்யலாம்

**4)**இந்நகராட்சி பகுதிகளில் கரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.18812/2017/MCA4, நாள்.07.04.2020–ம் தேதிய உத்தரவில் 2வது தவனையாக அம்மா உணவகத்தில் உணவு தட்டுப்பாடின்றி பொதுமக்களுக்கு வழங்க உணவு தயாரிக்க தேவையான மூலப்பொருட்களை வாங்கி பயண்படுத்திக்கொள்ள ரூ.276000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. அம்மா உணவகத்தில் துப்புரவு பணியாளர்கள், ஆதறவற்ற முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோற்களுக்கு உணவு தயாரிக்க மூலப்பொருட்களை வாங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.819–1/2020/எச்1)

5) இந்நகராட்சியில் வருவாய் நிதி 2019–20 யின் கீழ், நகர மன்றத் தீர்மான எண். , நாள். ல் அனுமதித்துள்ளபடி, 09.04.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றததின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | சென்னை–திருச்சி சாலையில் உள்ள மேம்பாலத்தின் கீழ் (பாண்டி மார்க்கம்) E-TOILET with Bio-Digester (2 WC units + 1 Urinal Unit) அமைக்கும் பணி | 975000/– | **Symber Bio Fabs Pvt Ltd** | –0.00% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | Innovators | + 2.38% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலககுறிப்பு :–

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு **Symber Bio Fabs Pvt Ltd**, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

6)அரசு ஆணை எண் 332 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் (எம்இ3) துறை நாள். 19.08.2019ல் நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகரமைப்பு அலுவலர்களுக்கு நகராட்சியின் நிலை (Grade) மற்றும் மக்கள் தொகை மற்றும் பரப்பளவு ஆகியவற்றிற்கு தகுந்தவாறு நகரமைப்பு ஆய்வர் மற்றும் நகரமைப்பு அலுவலர் பணியிடங்கள் புதியதாக உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இந் நகராட்சி தேர்வு நிலை நகராட்சி என்பதாலும் மக்கள் தொகை 50000க்கு மேல் உள்ளதாலும் ஏற்கனவே உள்ள நகரமைப்பு ஆய்வர் மற்றும் புதியதாக நகரமைப்பு அலுவலர் பணியிடம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை –28 அவர்களின் ந.க.எண்.24566/2013/VI. நாள். 24.03.2020ம் செயல்முறை உத்தரவில் தர்மபுரி நகராட்சியில் நகரமைப்பு அலுவலராக பணிபுரிந்த(கு.ப.நீ) K.கிருஷ்ணமூர்த்தி அவர்களை இந் நகராட்சி நகரமைப்பு அலுவலராக பணிபுரிய பணிமாறுதல் செய்து அனுமதிக்கப்பட்டது. அதன்படி இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண். 1017/2020/சி1. நாள். 09.04.2020 மூலம் திரு.K. கிருஷ்ணமூர்த்தி , நகரமைப்பு அலுவலர் 09.04.2020 முற்பகல் முதல் இந் நகராட்சியில் நகரமைப்பு அலுவலராக பணிபுரிய அனுமதிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:- 1)மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 1017/2020/சி1)

7) இந்நகராட்சியில் வருவாய் நிதி 2020–21 யின் கீழ், நகர மன்றத் தீர்மான எண். 61 , நாள்.31.03.2020 ல் அனுமதித்துள்ளபடி, 09.04.2020 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | சலவாதி சாலையில் உள்ள இரண்டு நுண்ணிய உரகிடங்குகளுக்கும் தண்ணீர் வசதி செய்ய 2 (GLR) தரை தள நீர் தேக்கத் தொட்டி,பைப்லைன் மற்றும் மோட்டார் அமைக்கும் பணி | 500000/– | பி. சரவணமூர்த்தி | –0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | வி.சேட்டு | + 2.20 % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலககுறிப்பு :–

1) மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு பி. சரவணமூர்த்தி, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

8) இந் நகராட்சி பகுதிகளில் கரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 3336/J2/2020-13, நாள்.09.04.2020ம் தேதிய உத்தரவில் 2 வது தவணையாக கரோன வைரஸ் தடுப்பு பணிக்கு தேவையான முகஉறை, கையுறை, உணவு மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி பயன்படுத்திக் கொள்ள SRDF நிதியில் ரூ.2000000/–ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. கரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.819/2020/எச்1)

**9)** இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் நாய்கள் பயணிக்கும் வாகனம் எண். TN 16A-8653 வாகனத்திற்கு புதிய டயர் மற்றும் டியூப் சப்ளை செய்ய **15.04.2020** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | ஒரு கைதெளிப்பான் விலை |
|---|---|---|
| 1 | Pankaj Tyres, Chennai main road,Tindivanam - 604 303. | ரூ.12500/– |
| 2 | Sakthi Tyres, No.280/10, Trichy Main Road, Thanthai Periyar Nagar, Bus Stop, Villupuram - 605 602. | ரூ.13250/– |
| 3 | Palaniappa Tyre Retreading Co., No.42, Mambazhapattu Road, Villupuram West - 605 602. | ரூ.13500/– |

அலுவலக குறிப்பு

1)மேற்கண்டவாறு பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1–ல் உள்ள Pankaj Tyres, Chennai main road,Tindivanam - 604 303. அவர்களால் அளிக்கப்பட்டுள்ள விலைப்புள்ளி குறைவாகவும் உள்ளதால் அவற்றினை ஏற்று சப்ளை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதார பணி அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.118 /2020/எச்1)

**10)** திண்டிவனம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந் நகர பகுதியியை சுற்றி உள்ள புற பகுதிகளில் **36** தூய்மை பணியாளர்கள் பணிக்காக வந்து செல்கின்றனர். தற்போது **144** தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அறிவுரையின்படி துப்புரவு பணி பாதிக்கப்படாமல் இருப்பதற்காக வெளியூர்களில் இருந்து வரும் பணியாளர்களை தினமும் மினி வேன் மூலம் ஏற்றி வந்து பணி முடித்த பின்பு அவர்களை அவர்களின் வீட்டில் விட தோராய செலவினம் ரூ.**55000/–** ( ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) செலவாகும். இச் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் **1920**விதி **15**ன்கீழ் மேற்கொண்ட பணியினை உள்ளூரில் உள்ள டிராவல்களின் விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :–

மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 819–7/2020/எச்1)

**11)** இந்நகராட்சியில் துப்புரவு அலுவலராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 29.02.2020 ல் ஓய்வு பெற்ற திரு. U.லிப்டன் சேகர் அவர்கள் சிறப்பு சேமநல நிதி கணக்கினை முடித்து அதற்கான தொகையினை வழங்குமாறு 24.02.2020ல் விண்ணப்பித்துள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம், உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்த நாள் | 17.11.1994 |
| 2 | ஓய்வு பெற்ற நாள் | 29.02.2020 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள். |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 28.02.2007 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | **வட்டிக்கணக்கீடு (01.03.2007 முதல் 29.02.2020 வரை கணக்கீடப்பட்டுள்ளது)** | ரூ.10715/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ.10000/- |
| | **மொத்தம்** | ரூ.23675/- |

எனவே திரு. U.லிப்டன் சேகர் ஓய்வு பெற்ற துப்புரவு அலுவலர் அவர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை **ரூ.2960/-ம்,** வட்டித் தொகை **ரூ.10715-ம்,** மற்றும் நிர்வாகப் பங்குத் தொகை **ரூ.10000-ம்,** ஆக மொத்தம் **ரூ.23675/-** வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** 1) அனுமதிக்கலாம்.
2)தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.679/2020/பி2)**

**12)** இந் நகராட்சி பகுதிகளில் கரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண். 3336/J2/2020-13, நாள்.23.04.2020ம் தேதிய உத்தரவில் கரோன வைரஸ் தடுப்பு பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகள் வாங்கி பயன்படுத்திக் கொள்ள SRDF நிதியில் ரூ.1000000/-ஒதுக்கீடு செய்ப்பட்டுள்ளது. இதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. கரோனா வைரஸ் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள செலவினம் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.819/2020/எச்1)

**13)** இந் நகராட்சிக்குட்பட்ட ஆர்.எஸ்.பிள்ளை குறுக்கு தெரு, குமரன் தெரு மற்றும் மரக்காணம் ரோடு ஆகிய இடங்களில் பகிர்மான குழாய்கள் இல்லாததால் புதியதாக 90 mm PVC பைப் லைன் அமைக்கவும் பணி செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**3,50,000**/க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**14)** இந் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கழிப்பறையை மராமத்து பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் கால்வாயினை சீர் செய்யவும் அனைத்து மரச்செடிகளை சுற்றி கட்டைகள் அமைத்து அழகுபடுத்தவும் RCC Slab கொண்டு Manhole Chamber களை மூடவும் பணி செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**6,00,000**/க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**15)** திண்டிவனம் நகராட்சி நேரு வீதி தாலுக்கா அலுவலகம் முன்புறம் மற்றும் பின்புறம் ஆர்.எஸ்.பிள்ளை வீதியில் வாகனங்கள் நெருக்கடியின் காரணமாக போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது. மேற்படி அந்த இடத்தில் உள்ள பாரதிதாசன் சிலையின் அருகில் உள்ள இடத்தை அழகுபடுத்தவும் மற்றும் **100** மீ நீளத்திற்கு பேவர் பிளாக் கற்கள் அமைக்கவும் பணி செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**5,00,000/**–க்கும் மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**16)** இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு வரும் மின்கலன் பொருத்திய (Battery Operated Vechile) வாகனங்களுக்கு புதியதாக 12V 75 AH Batteray(GEL),60V 1000W BLDC Motor,60V Heavy Controller,Differtial ( Heavy),Torque Loaded Gear Box ஆகியவை மாற்றுவது மற்றும் இதர பழுதடைந்த பாகங்கள் மாற்றி சர்வீஸ் செய்யும் பணிக்காக மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| விலைப்புள்ளிதாரர் பெயர் திருவாளர்கள் | விலைப்புள்ளி தொகை |
|---|---|
| Shree Bhairava Green Lines, Jolarpet | (-) Less |
| JSS Enterprises, Vaniyambadi. | (+) More |
| Aikon Power Technology, Chennai-107 | (+) More |

குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Shree Bhairava Green Lines,Jolarpet, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும் மற்றும் இதற்கான தோராய செலவீனம் ரூ **980000.00**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காலம்.

**17)** இந் நகராட்சி கிடங்கல் **1** பகுதியில் பொது கழிப்பிடம் இல்லாததால் பொது மக்கள் அவதிப்படுகின்றனர். மேலும் மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் அவர்களின் நேரடி ஆய்வின் போது மேற்படி பகுதியில் புதிய கழிப்பிடம் அமைத்து தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே கிடங்கல் **–1** பிள்ளையார் கோயில் பகுதியில் புதிய பொது கழிப்பிடம் அமைக்கவும் அதற்கான தோராய மதிப்பீடு ரூ.**8,00,000/–**க்கும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**நகராட்சி அலுவலகம்** **தனி அலுவலர் (பொ) மற்றும் ஆணையாளர்(பொ)**

**நாள்:- 30.04.2020** **திண்டிவனம் நகராட்சி.**